துணை ஆணையர்(வவ), சரகம்-11 அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி. பா. கீதா பாரதி, பி. ஆர்க்.,
இடம் : 2-ம் தளம், பேரறிஞர் அண்ணா பவள விழா
நினைவு இணைப்பு கட்டிடங்கள் கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006.

711
26 JUL 2017

நக.எண். 1364 /2017/அ1

நாள் : 17 .07.2017

பொருள் : நியமனம் (நேரடி) - தமிழ்நாடு அமைச்சுப்பணி / தமிழ்நாடு நீதி அமைச்சுப்பணி தமிழ்நாடு நில அளவை மற்றும் நிலப்பதிவு சார்நிலைப் பணி 2013-2014 மற்றும் 2014-2015 தொகுதி - IV- தட்டச்சர் - பணிவரன்முறை - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. இணை ஆணையர்(வவ), சென்னை(தெற்கு) கோட்டம் அவர்களின் நக.791/2016/A2-V நாள்-03.03.2016
2. இவ்வலுவலக நக. 625/2016/அ1, நாள் : 05.04.2016

*******

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், தொகுதி - IV 2013-2014 மற்றும் 2014-2015 மூலம் தட்டச்சராக தேர்வு செய்யப்பட்டு பார்வை -2-ல் காணும் ஆணையின் வாயிலாக இச்சரகத்திற்குட்பட்ட ஜெ.ஜெ நகர் வரிவிதிப்பு வட்டத்தில் பணியமர்த்தப்பட்ட திருமதி. ஆ. இராஜகுமாரிக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 15.04.2016 அன்றைய நாளிலிருந்து தட்டச்சர் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட தொடர்ச்சியான ஈராண்டு காலம் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. இக்காலத்தில் இவர் கணிப்பொறி பயிற்சி (Office Automation) மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூலில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இந்த பணிவரன்முறை ஆணையானது இப்பதவிகள் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீதான தீர்ப்பின் முடிவுக்குட்பட்டது.

இணைப்பு
தனியாளரின், பணிப்பதிவேடு
பருமன் - 1

ஒம்/- பா. கீதா பாரதி,
துணை ஆணையர்(வவ),
சரகம்-11, சென்னை-06.

பெறுநர்
1. தனியாளர் (உதவி ஆணையர்(வவ) ஜெ.ஜெ.நகர் வரிவிதிப்பு வட்டம் மூலமாக.

நகல்
1. இணை ஆணையர்(வவ), சென்னை(தெற்கு) கோட்டம்
அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பணியாளர் தொகுப்பு கட்டு
3. உதிரி

//உண்மை நகல்//

17/07/17
மேலாளர்.
17.7.17